<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்</u>.

முன்னிலை: திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஜெயங்கொண்டம்.

**2020ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ஆம் நாள் வியாழக்கிழமை**
**2049 திருவள்ளுவராண்டு விகாரி வருடம் மார்கழி மாதம் 24-ம் நாள்**
**<u>அசல் வழக்கு எண் - 338/2018</u>**

சீனிவாசன் - வாதி

/எதிர்/

1) சரோஜா
2) கருணாநிதி
3) பாலசந்தர்
4) முருகவேல்
5) ராஜ்குமார்
6) லெட்சுமி
7) சின்னதுரை
8) சீத்தாராமன்
9) ஆறுமுகம்
10) சார்பதிவாளர், ஆண்டிமடம்
11) மாவட்ட ஆட்சித்தலைவர், அரியலூர் - பிரதிவாதிகள்

------

தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 6ல் 1 பாகத்தை விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை வழங்கியும், பின்னர் சமூகம் கோர்ட் வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து தாவா சொத்துக்களை பொறுத்து நல இளப்பம் சரி கட்டி 6ல் 1 பாகத்திற்கு இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கியும், தாவா சொத்துக்களில் வாதியின் பாகம் வாதிக்கு தனி சுவாதீனம் கிடைக்க உத்திரவிட்டும், தாவா செலவுத்தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும் வேண்டி வாதியால் இத்தாவா தாக்கல்.

இவ்வழக்கு இன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.R.S.சந்திரமோகன் அவர்கள் ஆஜராகியும், 3, 7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 11 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் முன்னிலையாகியும், 8, 9 பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

**1, 4, 5** பிரதிவாதிகளுக்கு படிமெமோ செலுத்தப்படாததாலும், வாதி அழைத்தும் ஆஜரில்லாததாலும், மேலும் இவ்வழக்கானது இன்று மாலை **3.00** மணிவரை விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தும் வாதியிடமிருந்து எவ்வித முகாந்திரமும் இல்லை

என்பதாலும் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2020ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>

-இல்லை-

(ஒப்பம்) திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.